# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 166/2015**

பெயர்: **மணி(எ) அண்ணாமலை** நாள்: 20.09.2023

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – மணி(எ) அண்ணாமலை - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.25</u>

வழக்கு சொத்துக்கள் ஒன்றை ஒன்று ஒட்டினாற்போல் இல்லை. சர்வே எண் 15/16**E** க்கு கிழக்குபுறத்தில் சர்வே எண் 15/16**F** உள்ளது. சர்வே எண் 15/16**F** க்கு ஒட்டினாற்போல் உள்ள சர்வே எண் 15/16**H** ல் ஒரு பொது வண்டித்தடம் உள்ளது. அந்த தடத்திற்கு கிழக்குபுறத்தில் சர்வே எண் 15/16**L** சொத்தானது உள்ளது. சர்வே எண் 15/16**E** மற்றும் **F** சொத்துக்கள் எனக்கு பூர்வீக சொத்துக்களாகும். இதில் சர்வே எண் 15/16**E** ஆனது என்னுடைய தகப்பனார் பெயரில் உள்ளது. சர்வே எண் 15/16**E** ல் ஒரு நானும் எனது தாயாரும் குடிசை வீடு கட்டி வாழ்ந்து வருகிறோம். சர்வே எண் 15/16**F** சொத்தானது எனது சித்தப்பா கண்ணு(எ) கண்ணுபையனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அதில் அவர் வீடு கட்டி குடியிருந்து வந்தார். என்னுடைய சித்தப்பா எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. என்னுடைய சித்தப்பா இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளான பச்சியம்மாள்(எ) வசந்தா, மலர்விழி ஆகியோர்களிடமிருந்து நான் சொத்தை கிரையம் பெற்றேன். நான் 16.12.1994 ம் தேதியில் கிரையம் பெற்றேன். அந்த கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2) ஒரு சொத்தை வாங்கும்போது செக்குபந்தி கண்டுதான் கிரையம் பெறவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் செக்குபந்தி கண்டுதான் கிரையம் பெற்றுள்ளேன். செக்குபந்தி விபரம் 3 ம் பிரதிவாதி சுப்ரமணி நிலத்திற்கும் வடக்கு, எனது தகப்பனார் நிலத்திற்கு கிழக்கு, சின்னத்தம்பி வகையறா நிலத்திற்கு மேற்கேயும் தெற்கேயும் ஆகும். சர்வே எண் 15/16 ஆனது உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பாகவே நான் கிரையம் பெற்றேன். நான் 4 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளேன். சர்வே எண் 15/16 ஆனது எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

3) வழக்கு தாக்கல் செய்த பிறகாவது தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. சர்வே எண் 15/16**H** க்கு மேற்கே உள்ள இடத்தைதான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால், சரிதான். நான் ஒருபோதும் சர்வே எண் 15/16**L** ல் உள்ள சொத்தை அனுபவம் செய்து வந்ததில்லை என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 15/16**L** ல் உள்ள சொத்து முழுவதும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் சாமி(எ)பச்சமுத்துவுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரியல்ல. சர்வே எண் 15/16**L** ல் உள்ள சொத்தை சாமி(எ)பச்சமுத்து க்கு பாத்தியப்பட்ட சொத்தை 2 ம் பிரதிவாதி தனது மகனான 1 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால், சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் 1 ம் பிரதிவாதியிடமிருந்து 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்கள் நடைமுறைக்கு வந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

4) சர்வே எண் 15/16**L** ல் எனது தகப்பனாரின் சமாதி இல்லை. வழக்குரையில் சர்வே எண் 15/16**L** ல் சமாதி உள்ளதாக கூறியுள்ளது பொய் என்றால், சரிதான். சர்வே எண் 15/16**L** க்கான பட்டா 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால், அதை நான் பார்க்கவில்லை. 3 ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளதை ஒத்துக்கொண்டால் அது வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் பட்டாவை பார்த்ததில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. அதனால் 2 ம் இன வழக்கு சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி ஆகவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.46</u>

ஒப்பம் /மணி(எ) அண்ணாமலை

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.